## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No.41/2014

Deposition of **P.W.-3** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr.G. MahaVishnu, Gr. III Bench clerk of this court, on 11.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சுந்தரம் | Father's Name | : சுப்ரமணி |
| Village | : பனைமடல் | Taluk | : பெத்தநாயக்கன்பாளையம் |
| Calling | : கிராம நிர்வாக அலுவலர் | Age | : 37 |

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

துவக்க நேரம்: 12.11P.M

**வாதி தரப்பு முதல் விசாரணை**: நான் தற்பொழுது பனைமடல் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். எனக்கு அழைப்பாணையில் தாவா சொத்தானா ச.எண்.208/3-ல் உள்ள நிலம் தொடர்பான ஆவணங்களை சமர்பித்து சாட்சியம் அளிக்க வேண்டி குறிப்பிடப்பட்டிருந்தது.

2) ச.எண்.208/3-ல் மொத்த விஸ்தீரணம் பு.ஹெக்டேர் 0.73.0 இதற்கு ஏக்.1.80 செண்ட் நிலம் ஆகும். மேற்படி நிலம் பனைமடல் கிராம எல்லையில் அமைந்துள்ளது. மேற்படி சொத்திற்குண்டா அ பதிவேட்டில் அய்யம்பெருமாள் படையாட்சி பெயர் பதிவாகியுள்ளது. மேற்படி அ பதிவேட்டின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **சா.சா.ஆ.1(Ex.X1)** ஆகும்.

3) தாவா சொத்தின் கை சிட்டா இருசப்ப படையாட்சி மகன் அய்யம்பெருமாள் பெயரில் பதிவாகி அதன்பிறகு மாணிக்க படையாட்சி மகன் அன்புகரசு பெயரிலும் பின்னிட்டு அவரது மகன் தட்சிணாமூர்த்தி பெயரிலும் பதிவாகியுள்ளது. அதற்குண்டான செயல்முறை ஆணையின் குறிப்பும் பதிவாகியுள்ளது. மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் (2 தாள்கள்) **Ex.X2-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சர்வே எண்ணிற்கான கணினி சிட்டா அன்புகரசு மகன் தட்சிணாமூர்த்தி பெயரில் பதிவாகியுள்ளது. அந்த ஆவணம் **Ex.X3**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நிலத்தின் பட்டா எண்.10525 ஆகும்.

4) மேற்டி சர்வே எண்ணிற்குண்டான அடங்கல் தட்சிணாமூர்த்தி பெயரில் பதிவாகியுள்ளது. அதன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **Ex.X4 -** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புலவரைபடத்தின் சான்றிட்ட நகல் **Ex.X5 -** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் நீதிமன்றத்திலிருந்து ஆவணம் கிடைக்கப்பெற்ற பின்பு தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளதை என்பதை அறிய நேரில் சென்று பார்வையிட்டேன். மேற்படி இடமானது அன்புகரசு மகன் தட்சிணாமூர்த்தி அனுபவத்தில் உள்ளது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 12.25 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.41/2014, Dt.11.08.2025.